



# சிவ தொண்டன்


[செந்தமிழ்த் திங்கள் வெளியீடு]

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவா னீசன்"

மலர் ௨ } யாழ்ப்பாணம், விக்கிரம ஆண்டு, ஆவணித் திங்கள் (16-8-40) { இதழ் ௩


திருக்கடவூர் — திருநேரிசை

மண்ணிடைக் குரம்பைதன்னை மதித்துநீர் மையலெய்தில்
விண்ணிடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவாரார்
பண்ணிடைச் சுவைகள்பாடி ஆடிடும் பத்தர்க்கென்றுங்
கண்ணிடை மணியர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே.

—அப்பர் சுவாமிகள்.

செப்பறைப்பதி

## அகிலாண்டேஸ்வரி பதிகம்

(முற்றொடர்)

உடலத்தி லின்றெனக் கொழியாத விச்சைதா
    னுற்றதே துன்ற லாலே
உற்றதே னீதநு வளித்திடும் போதெலா
    முறவேண்டு மென்ற னியல்பேல்
கடலொத்த பிறவிதனி லெந்நாளு மவ்விச்சை
    கட்டுற்று நிற்க வேண்டும்
கடியமல சத்திசற் றகலவரு மெனிலவை
    கழித்ததார் நீக மிக்கில்
கெடலுற்ற வெல்லா வுயிர்க்குநீக் குவையாங்
    கெடுத்தாலு மம்ம லந்தான்
கெட்டாலு முனைவந்து கிட்டிவழி படுவதென்
    கேடிலா விவைய ருளுவாய்
அடலுற்ற திரிபுர மடங்கலு மெரித்ததிரு
    வக்கினி சுரரை மருவும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
    வகிலாண்ட மென்னு மரசே,    அ.

# ஆயனார் மேய்க்கிறார்!

சாந்தத்தின் பேரழகை, பாலாக்களின் பார்வையிலே, நடையிலே, எல்லையற்ற பொறுமையிலே பொங்கக்காணலாம். கன்றை எதிரிலே பிணித்துவிட்டுப் பால் கொள்ளும் போது பார்த்து விட்டோமானால் ஐம்பொறியடக்கம் பழகுவதற்காக ஆமைக்குப் பின் அலையவேண்டி வராது. காலையிலே அந்த நல்லாவின் தோற்றத்தை மனத்திலிருத்திக் கொண்டால் அன்று முழுதும் அமைதியும் அன்பும் பரோபகாரமும் வாழ்விலே ததும்பும். தாயின் கரையில்லாத காதல், உலகத்திலே காணப்படுகிற அன்பெல்லாம், கன்றை நோக்கிய பசுவின் தடையற்ற அன்புக்கு மிகப் பின்னே நின்று விடுகின்றன. தன் ஒரே உறவான, உயிரான கன்றுக்குப் பால் விடாது கறக்கும் துரோகிகளையே, அன்போடு நக்கிக் கொடுக்கும் ஆவையொழிய அஹிம்சாரூபிணியாக வேறெதனைக் கூறலாம். தீமையில்லாத சக்தி நிறைந்த உணவு, சுவைமயமான மருந்து, இறைவனுக்கு மிக உவப்பான திரவியம், விருந்துக்கு இன்றியமையாத முதற்பொருள், எல்லா அசுத்தங்களையும் போக்கும் பரிசுத்த திரவியம், இவையெல்லாவற்றையுந் தந்து உடலையும் உயிரையும் ஒருங்கு காக்கும் அன்னை பராசக்தியாக நிற்பது பசு. அத்தகைய பசுவைத் தெய்வப்பிறவி என்பதற்கும் சந்தேகமா! பசுக்காத்தலையன்றி, பரிசுத்தம், பரோபகாரம், உற்சாகமான தொழில், சைவத்தொண்டு, வேறிருக்கமுடியுமா?

ஆனந்தமூர்த்தியான கிருஷ்ணன் குழலை எடுத்துக் கொண்டு ஆனிரைகளுக்குப் பின்னே புறப்பட்டு விடுகிறான், காடெல்லாம் அலைகிறான். குழலோசையால் மருட்டிப் பசும்புல்லும் நறுநீரும் ஊட்டுகிறான். அமுதகீதம் இல்லாவிட்டால் கன்றை நினைப்பதிலே ஆயர்க்கு முன்னே செல்லும் அந்தத் தாயருடைய பொழுது போய்விடும் போலும். சேக்கிழார் சுவாமிகள் நாயன்மார் மூவரை ஆனிரைகளுக்கிடையிலே நமக்குக் காட்டுகிறார். ஒருவன் அமுதொழுகுந் தோற்றமுடையவன், பிராமணச் சிறுவன். ஒருவர் முனிவர் பெருமான், திருக்கயிலாயத்திலிருந்து வந்தவர். மற்றவர் நலமெல்லாம் நிரம்பிய இளைஞர். இவரைத் தொடருமுன் சேக்கிழாரிடம் வேறு சில அறியவேண்டும்.

சேக்கிழார் பெருமான் நமக்குத் தருகின்ற பெரியார் பலர், சோதனை—சகித்தற்கரிய சோதனை—பொருந்திய வரலாறுடையவர்கள். அவ்வரலாறுகளைப் படித்தால், எல்லையற்ற கருணையுடைய இறைவனை 'இவ்வளவு இறுகிய நெஞ்சா இவனுக்கு' என்று கொடுமை கூறுவோம். இந்தச் சோதனைக்கு ஆகப்படாதவர் சிலர், அவருள் நம் இளைஞரொருவர். இவர் வரலாறு கூறும் பகுதியிலே இனிமை, ஈரம், உருக்கம் ஏற்றமென்பன விளையாடுகின்றன.

"மாடு விரைப்பொலி சோலையில் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு".

என்னும் முதற்பாட்டைக் காணும்போதே, உள்ளமும் உயிரும் இறைவனை நோக்கி வாழ்க்கையில் மேலேறிச் சென்று அருள்வளம் பொருந்திய இன்ப நிலத்தில் நிலைபெறுந் தன்மை கண்முன் வந்து விடுகிறது

"பூமலி தேமாவின், காவினறுங்குளிர் நீழலுறங்
குவ கார்மேதி"

எருமை, கொழுமையால் முகில் போன்று கருமையும் அழகும் மிக்க எருமை, உறங்குகிறது குளிர்ந்த நீழலிலே! நறிய, இனியநிழல். தேமா, பூமலிந்து குலுங்குந் தேமாவின் நீழல். தனிநிற்கும் மரநிழலிலே வெம்மையும் வீசலாம். சோலையில் நிற்கும் மரநிழலே வெம்மை காணவும் முடியாதே! பூக்கள் இனிய வாசனையை உமிழ்கின்றன. அதன் கவலையற்ற, அச்சமறியாத, வெம்மையே அளையாத நித்திரையை யார்தாம் விரும்பார்! யோகிகளுடைய சமாதியின்பம், இறைவன் திருவடி நீழலில் உறங்கும் அடியார் இன்பத்துக்கு, இப்பகுதி பிரதிபிம்பமாகி நிற்கிறது. "பூமலி தேமாவின் காவினறுங் குளிர் நீழலுறங்குவ கார்மேதி".

இளம்பசுவின் தலையீற்றுக் கன்று, ஈன்ற துன்பத்தின் மிகுதியிலிருந்து பசு இன்னும் மீளவில்லை, அந்தக் கன்று, புதல்களை, நிலத்தை உதைத்து அயலில் விளையாடும் மான் கன்றினோடு "குதித்தோடு"கிறது! தாயின் பேரன்பையும் பிரிவாற்றாமையையும் ஈன்ற நோவையும் உணராமல் மான்மறியோடும் அது குதித்தோடும் உற்சாகம், உலகபாசத்தையும் அத்துன்பத்தையும் பொருட்படுத்தாமல் தம்போன்ற பக்தர்களோடு அருள் வெறியாலே கவலையின்றி மனவெழுச்சியோடு வாழும் பெரியோரியல்பை அப்படியே காட்டுகிறது.

இன்னுமொரு காட்சி, முல்லை, கார்காலத்தோடு தழுவிப் பொலிந்த முல்லையின் குளிர்ந்த வெள்ளிய முகையிலே வண்டு இருக்கிறது, பாய்வதற்குக் காலம் பார்த்துக் கொண்டு. குவளை எப்போது கட்டவிழ்ந்து இடமளிக்கும், அதன்கண் தேன் எப்போது ததும்பும், அதன் புதுமணத்தைத் தப்பாமல் உண்ண வேண்டுமென்ற நினைவினால் நிரம்பியிருக்கிறது! காயாமரத்தின் மேலே நாரைகள் இருக்கின்றன, தமக்கு இயற்கையான அடக்கத்தோடு, சமயம் பார்க்கிற பொல்லாத அடக்கத்தோடு, வயலிடத்தே கயல் ஒருமுறை எழுந்து மறையும், ஆரவாரமின்றி யிருந்து, கருத்தூன்றியிருந்து, அது எழும் அவசரத்திலே அகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று! தாமிருக்கும் வெளியுலக நிலையை மறவாமல் மறந்து, மெய்யறிவாளர் தம் லட்சியத்தை யடைவதற்குச் சமயம் பார்க்கும் முறை இந்தக் காட்சியிலே மிகத் தெளிவாகக் காட்டப்படுகிறது.

இத்தகைய நிலத்திலே நாமெல்லாம் கைகுவிக்குமாறு எங்கிருந்தோ "வந்துதயஞ் செய்தார்" ஆனாயர்! நினைப்பு, சொல், செயலிலெல்லாம் பேயுடனாடும் பெருமானுக்கல்லது தலைமை தாராச் செருக்கு அவன் தலைமைக்கீழ் முதிர்கின்றது. அந்த ஆயனாருடைய தலைமையின் கீழ் வாழும் நிரைகள் மிகப் பல, அவைகளிடத்து நோயே இல்லை. தீயவிலங்குகளின் கொடுமையும் அச்சுறுத்தலும் அந்த நிரைகளிடம் வாய்க்கா. நல்ல புல்லும் நல்ல நீரும். சுதந்திர வாழ்வு! அதனாலே எல்லையின்றி மிகுகின்றன நிரைகள். கறப்பனவாய பசுக்கள் கன்றோடு கவலையின்றிக் காணப்படுகின்றன.

பயன் நிரம்பிய பாலாக்கள், நடைதளர்ந்த சினைப் பசுக்கள், பிரிவாற்றாத ஈன்றணிய பசுக்கள், கவலை, அச்சமறியாத கன்றுகள், வெற்றியையே நோக்குகின்ற செருக்கு மிக்க விடைகள், பால் மறுத்தனவும் ஈனாதனவுமாய் எதிர்காலத்துப் பயனை உட்கொண்ட பால் மறையும் நாகும், இவையெல்லாம் ஆயனாருடைய நிழலில் வாழும் குழந்தைகள்.

(தொடரும்)

# கருமயோகம்

(க0௫-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படித் தன்னைப் பக்குவப்படுத்தல் அநுவசியமானது மல்லாமல் அவனைத் தைரியவீனப் படுத்திக் கிஷயத்தில் நீதியான கடமைகளை அவன் புரிவதற்குத் தடையாயும் முடியும். அத்துடன் முதலாவதாய் அறிவையும் இரண்டாவதாய்ச் செல்வத்தையும் — இவை யிரண்டையும் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அவன் கடும் முயற்சி செய்ய வேண்டும். அது அவனுடைய கடமை. தன் கடமையைச் செய்யாவிடின், அவனை உலகம் அறியாது. செல்வத்தைச் சம்பாதிப்பதில் பிரயாசை யெடுக்காத கிரகஸ்தன் ஒழுக்க மற்றவன். அவன் சோம்பலுடையவனாய் ஒரு முயற்சியற்ற ஜீவியம் பண்ணுவதிற் பிரியப்படுவானானால், துன்மார்க்க வழியி லொழுகுகின்றான். ஏனெனில் நூற்றுக்கணக்கானவர்கள் அவனை வேண்டி யிருக்கிறார்கள். அவன் திரவியம் சம்பாதித்தால் ஏனைய நூற்றுக்கணக்கானோர் அவனை யொட்டிச் ஜீவனம் பண்ண முடியும்.

நூற்றுக் கணக்கானோர் இந்நகரத்தில் தனவந்தர்களாய் வர முயற்சி செய்து பொருளைச் சம்பாதித் திருக்காவிட்டால் இந்த நாகரீகமும் இந்தத் தர்ம சாலைகளும் இந்தப் பெரிய வீடுகளும் எப்படி வந்திருக்கக் கூடும்?

அப்படிப்பட்ட விஷயத்துக்காகப் பொருள் சம்பாதிப்பதிற் குற்றமில்லை. ஏனெனில், அப் பொருள் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற் குதவுகிறது. கிரகஸ்தன் மனித வாழ்க்கைக்கும் சனசங்கத்துக்கும் மத்தியி லிருக்கிறான். பொருளைச் சம்பாதித்து அதை யுத்தமமான வழியிற் செலவு செய்வதினாற் கடவுள் வழிபாட்டின் பலனை யடைகிறான். ஏனெனில், நல்ல வழியிலே நல்ல முகாந்தரங்களுக்காகக் கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதிக்கும் கிரகஸ்தன் செய்யும் வேலையும் முத்தியடைவதற்காகத் தன் ஆசிரமத்திலிருந்து செபம் பண்ணும் சந்நியாசியின் வேலையுங் கிட்டத்தட்ட ஒரேவிதம். எனெப்படியெனில் கடவுளிடத்தேயும் அவருக்குச் சொந்தமானவை யிடத்திலும் வைத்திருக்கும் திட பக்தியினால் ஏவப்பட்டுத் தன்னை ஒப்படைத்துத் தியாகஞ் செய்யும் நற்குணந்தான் இவர்களிருவரிடத்திலும் வித்தியாசப்பட்டுத் தோற்றுவதை நாம் காண்கிறோம்.

அவன் தனக்கு நல்ல பெயரை வருவிப்பதற்கு எல்லா வகையிலுந் தெண்டிக்க வேண்டும். அவன் சூதாட்டப்படாது. துன்மார்க்கரோடு சகவாசம் பண்ணப்படாது. பொய் பேசாமலும் மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடாமலும் நடந்துகொள்ள வேண்டும்.

பலமுறையும் மனிதர் தாங்கள் நிறைவேற்ற வழிவகை யில்லாத காரியங்களிற் பிரவேசிப்பதினால் தாங்கள் எடுத்துக்கொண்ட காரியங்களைச் செய்து முடிப்பதற்குப் பிறரை ஏமாற்றவேண்டி யிருக்கிறது. அத்துடன் எல்லா விஷயங்களிலும் கவனிக்க வேண்டிய காலப் பொருத்தமென் றொன்றுண்டு. ஒரு காலத்தில் சித்திக்காதது ஒருவேளை இன்னொரு காலத்தில் மிகவு மநுகூலத்துக்கு வரக்கூடும். கிரகஸ்தன் உண்மை பேசவேண்டும். மனிதரைச் சந்தோஷப்படுத்தக் கூடியவும் மற்றவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியவுமான சொற்களை யுபயோகித்துப் பதமையாய்ப் பேச வேண்டும். அத்துடன் பேசும்பொழுது பிறருடைய விஷயத்திற் பிரவேசிக்கப்படாது. குளங்கள் வெட்டுவதினாலும் தெருக்கரைகளில் மரங்கள் நடுவதினாலும் மனிதரும் மிருகங்களுந் தங்கச் சாவடிகள் ஸ்தாபிப்பதினாலும் வீதிகளை யுண்டாக்குவதாலும் பாலங்களைக் கட்டுவதாலும் ஒரு சிறந்த யோகி யடையும் பலனை ஒரு கிரகஸ்த னடைகிறான்.

முயற்சி கிரகஸ்தனுடைய கடமை — இது கர்மயோகத்து ளடங்கிய வுபதேசத்தி னொரு பகுதி. இதற்கப்பால் ஒரு வாக்கிய முண்டு. அதில் சொல்லப்பட்டிருக்கிற தென்னவெனில் "தன் தேசத்துக்காக அல்லது தன் சமயத்துக்காகச் சண்டைக்குப் போய் யுத்த களத்தில் கிரகஸ்தனானவன் தன்னுயிரை யிழப்பானாகில், யோகாப்பியாசத்தினால் ஒரு யோகி யடையும் பலனை யடைகிறான்". அது எதைக் காட்டுகிற தென்றால் ஒருவருக்கு வகுக்கப்பட்ட கடமை இன்னொருவருக்குக் கடமையாக விருக்க வேண்டிய தில்லை. அதுவுமல்லாமல் ஒருகடமை இழிவான தென்றும் மற்றக் கடமை உயர்வான தென்றும் அங்கே கூறப்படவில்லை. ஒவ்வொரு கடமைக்கும் அதற்குரிய நிலைய முண்டு. நாங்க ளிருக்கும் நிலைக்குத் தகுந்தவிதமாய் நமமுடைய கடமைகளை நாம் புரிய வேண்டும்.

இவைகளெல்லாவற்றிலு மிருந்து ஒரு சங்கதி வெளியாகிறது — அஃதாவது எல்லாவித பெலவீனங்களும் தகாதென்னுந் தீர்ப்பு. தத்துவ ஞான சம்பந்தமாயோ சமய விஷயத்திலோ அல்லது கருமத்தைப்பற்றியோ கூறப்பட்டிருக்கு மெங்கள் கற்பனைகளெல்லாவற்றிலும் இத் தீர்ப்பு விசேஷமாகக் காணப்படுகின்றது. நீங்கள் வேதங்களைப் படிப்பீர்களானால் "அச்ச மின்மை" [ ஒரு பொல்லாப்பு மில்லை] என்னும் பதம் திரும்பத் திரும்ப வருவதைக் காண்பீர்கள். அச்சம் பெலவீனத்தைக் குறிக்கும். ஒருவன் உலகத்தவர்களுடைய கேலிகளையும் பரிகாசத்தையும் பொருட்படுத்தாது தன் கடமைகளை யாற்றல் வேண்டும்.

தெய்வத்தை வழிபடும் நோக்கத்துடன் உலகை விட்டுத் துறந்த வொருவன் உலகிலே ஜீவித்து உலக நன்மைக்காகப் பாடுபடுகிறவர்கள் தெய்வத்தை வழிபடவில்லை யென்று நினைக்கப்படாது. பெண்டிர் பிள்ளைகளுக்காக வுலகில் ஜீவிப்பவர்களும் உலகத்தை விட்டுத் துறந்தவர்களை இழிவான நாடோடிகளாக வெண்ணப்படாது. தனக்குப் பொருத்தமுள்ள ஸ்தானத்திலே யிருக்கும் ஒவ்வொருவனும் பெரியவன். இதற்குத் திருஷ்டாந்தமாக நான் ஒரு கதை சொல்லுவேன்.

ஒரு இராசா தன் தேசத்தைத் தரிசிக்கவந்த எல்லாச் சந்யாசிகளையும் உலகைத் துறந்து சந்யாசம் பூண்டவனோ உலகில் ஜீவித்துக் கொண்டு தன் கடமைகளைச் செய்து கொண்டு இல்லறம் நடாத்துபவனோ பெரியவனெனக் கேட்பதுண்டு. பல வறிஞர் இக் கேள்விக்குச் சரியான விடைகூற எத்த

னித்தார்கள். சந்நியாசிதான் பெரியவனெனச் சிலர் கூறியபொழுது அவர்கள் தங்கள் கூற்றை நிரூபிக்க வேண்டுமென்று அரசன் கட்டளையிட்டான். அவர்களப்படி நிரூபிக்க முடியாதிருந்த பொழுது அவர்கள் கலியாணம் பண்ணி இல்லற வாழ்க்கையை நடாத்த வேண்டுமென்று கட்டளையிட்டான். மற்றுஞ் சிலர் வந்து தன்னுடைய கடமைகளைச் செய்யுங் கிரகஸ்தன்தான் பெரியவனெனக் கூறினர். அவர்களிடத்திலும் அரசன் அத்தாக்ஷி கேட்டான். அவர்களால் அத்தாக்ஷிப்பண்ண முடியாத பொழுது அவர்களையும் இல்வாழ்க்கையிலமரும்படி செய்தான்.

கடைசியாக ஓர் இளஞ் சந்நியாசி வந்தான். அவனையும் அரசன் அதே கேள்வி கேட்டான். அவன் அதற்குத் "தனித்தனியாய் ஒவ்வொருவனும் தனக்குரிய விடத்தில் ஒப்பற்ற மகிமை பொருந்தியவனுயிருக்கிறான்" என விடையளித்தான். "இதை எனக்கு அத்தாக்ஷிப்படுத்து" என அரசன் அவனைக் கேட்டான். அதற்குச் சந்நியாசி "நான் அதை உமக்கு அத்தாக்ஷிப்படுத்துவேன். ஆனுல் முதலில் நீர் என்னுடன் வந்து நான் சீவிப்பதுபோற் சில காலஞ் சீவித்தாற்றான் நான் சொல்வதை என்னுல் அத்தாக்ஷிப் படுத்த முடியும்" என்று பதில் கூறினுன். அரசன் அதற்குச் சம்மதித்து தன் சீமையைக் கடந்து அதற்கப்பால் சந்நியாசியுடன் சென்றுன். மற்றுமநேக தேசங்களுக் கூடாகச் சென்றபின் இருவரும் கடைசியில் ஒரு பெரிய இராச்சியத்தை யடைந்தார்கள். அவ்விராச்சியத்தின் தலைநகரிலே ஓர் பெரிய சடங்குக்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. மேளச் சத்தமும் சங்கீத வொலியும் விளம்பரங் கூறுவோரின் குரலும் இராசாவுடையவும் சந்நியாசியினுடையவுங் காதுகளுக்கெட்டின. சனங்கள் உற்சவகால உடைகளுடன் வீதிகளிற் கூட்டமாகக் குவிந்திருந்தார்கள். ஓர் மகத்தான இராசகட்டளை பிரசித்தம் பண்ணப்பட்டுக்கொண்டிருந்தது. அரசனும் சந்நியாசியும் என்ன நடைபெறுகிறதென்று பார்த்துக்கொண்டு நின்றுர்கள். அத்தேசத் தரசனின் புத்திரியாகிய இராசகுமாரத்தி தனக்கு முன்பாகச் சமுகமளித்திருப்போரி லொருவரைத் தனது வரனுகத் தெரிந்தெடுக்கப் போகிறுளென விளம்பரஞ் செய்பவன் உரத்துக் கூறிக்கொண்டு போனுன்.

இராச குமாரத்திகள் இந்தவிதமாகத் தங்கள் கணவரைத் தெரிந்தெடுப்பது இந்தியாவிலே ஒரு புராதன வழக்கம். ஒவ்வொரு இளவரசிக்கும் தனக்கெவ்வகைப்பட்ட நாயகன் தேவை யென்பதைப்பற்றி அபிப்பிராயங்களுண்டு. சிலர் அழகு பொருந்திய வனை நாடுவார்கள். வேறுசிலர் சிறந்த கல்விமான்களை மட்டும் விரும்புவார்கள். இன்னுஞ் சிலர் நிகரற்ற செல்வம் பொருந்தியவர்களை மணஞ் செய்ய விரும்புவார்கள். இவ்வண்ணமே ஏனையோரும். அயலூர்களிலேயிருந்த எல்லா விளவரசர்களும் ஜெபமான உடையுடுத்துக் கொண்டு அவள் முன்பாகத் தரிசனங் கொடுத்தார்கள். அவைகளுட் சிலரும் தங்கள் விசேஷங்களை யெடுத்துக் கூறுவதற்கும் தங்களையே இளவரசி தெரிவாளென்று தாங்கள் நம்புவதற்கு நியாயங்கள் காட்டிக் கூறுவதற்கும் ஒவர்களை நியமித்திருந்தார்கள். (தொடரும்)

"ஒரு பொல்லாப்பு மில்லை"

# அனந்தசக்தி

எறும்பு இறந்துபோன புழுவை இழுத்துச் செல்லுகிறது; எதனுல்? சக்தியினுல். தூமகேது அநேகலட்சம் யோசனை தூரமான தனது வாலை இழுத்துக்கொண்டு திசைவெளியில் மஹாவேகத்தோடு சுழலுகின்றது; எதனுல்? சக்தியினுல். அந்தத் தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில ஒரு மண்டலமாகத் தன்னைச் சுற்றி வரும்படி சூரியகோளம் நியமிக்கிறது; எதனுல்? சக்தியினுல்.

ஓர் கன்னிகை பாடுகிறுள். நெப்போலியன் ஐரோப்பாக் கண்டம் முழுமையும் வெல்லுகிறுன். இவை இரண்டிற்கும் சக்தியே ஆதாரம். கண்ணுக்குப் புலப்படுவதும், ஊக்கத்திற்குப் புலப்படுவதுமாகிய வெளியுலகங் கூட எல்லையற்றதென்று பண்டிதர்கள் கண்டிருக்கிறுர்கள். இந்த எல்லையற்ற உலகத்தை இயக்கும் சக்திதானும் எல்லையற்றதாகும், அநந்தமானது, அதனிலும் பெரிது. இவ்வித சக்தியை மனிதன் பாவனை செய்வதால் பலவிதப் பயன்களுண்டு. "யத்பாவ யளிதத் பவளி", எதனைப் பாவிக்கிறுயோ நீ அதுவாக ஆகின்றுய்.

ஆனுல், இங்ஙனம் பாவனை செய்வது லேசான காரியமென்று நினைத்து விடலாகாது. உயிர் ததும்பியதும் கனல்வதுமான சிரத்தையுடன் பாவனை செய்ய வேண்டும். பொறிபறக்கும் பக்தியுடன் தியானம் செய்யவேண்டும். இதனை விளங்கதை யென்று நினைத்துவிட வேண்டாம். விடாமல் அனுஷ்டானம் செய்து பார்த்தால் இதன் பயன் தெரியும்.

ஞானிகளென்றும் யோகிகளென்றும் சொல்லப்படுவோர், இந்த சக்தியை, மனதறிந்து சில முறைகளை அனுஷ்டித்து, பெறுகிறுர்கள் ஸாமான்ய ஜனங்கள் விஷயம தெரியாமல் இயற்கை முறையிலே சிறிது பெற்றவர்களாகின்றனர். சக்தி சிறிதும் இல்லாவிட்டால், ஒருவன் க்ஷண நேரங்கூட மூச்சு விட்டுக் கொண்டு இவ்வுலகத்தில் இருக்க முடியாது வெளிக் காற்றிலே உலவி அத்துடன் யோகப்படுவதால் சக்தியுண்டாகிறது. சரீரத்தை உழைப்புக்கு உட்படுத்துவதால் இடைவெளி யெங்கும் ததும்பிக் கிடக்கும் சக்தி அதனுள்ளே குடி கொள்ளுகிறது. அறிவைப் பல விஷயங்களிலே சிரத்தையுடன் செலுத்தி உழைப்பதனுல் சக்தி யுண்டாகிறது. இங்ஙனம் சிறிதுசிறிது ஏற்படும் சக்தியினுலேயே தான் உலகத்தில் மனிதர்கள் ஜீவித்திருக்கிறுர்கள்.

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டுமென்பது நமது நோக்கம், இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம். 'மாதா இந்நாட்டு ஜனங்களுக்குச் சக்தி யதிகரிக்கும்படி செய்க; அக் காரியத்தை நிறைவேற்றுதற்குரிய சக்தியை எனக்கருள் புரிக' என்று நம்மில் ஒவ்வொருவனும் தியானம் புரிய வேண்டும். ஆட்டம் ஆடுதல், கூத்து முதலியவை, மற்போர் முதலியவற்றிலே பழகுதல்; பாடுதல், தர்க்கம், வாதம், தவம், பிரம்மசரியம்; சுத்தம் முதலியவற்றுல் ஓர் ஜாதிக்கு சக்தி அதிகப்படுகிறது. மனம், வாக்கு, செயல் மூன்றும் சுத்தமாக இருக்கவேண்டும். உள்ளும் புறமும் மாசில்லாது செய்யப் பழக வேண்டும். பயம், ஸந்தேஹம், சலனம் மூன்றையும் வெறுக்கவேண்டும். இதனுல் சக்தியேற்படும்.

# சூரியன்

கசியபனுக்கு அதிதி வயிற்றிலே பிறந்த புத்திரன். மனைவி துவஷ்டா புத்திரியாகிய சஞ்ஞாதேவி. இவளிடத்திலே பிறந்த புத்திரர் வைவசுவத மனுவும் யமனுமென இருவர். புத்திரி யமுனை. உதயத்தில் சூரியன் பிரமாவினது சொரூப மென்றும் மத்தியானகால சூரியன் சிவ சொரூப மென்றும் அஸ்தமயனகால சூரியன் விஷ்ணு சொரூபமென்றும் கொண்டு ஜபத்திலே தியானிக்கப்படுவன் சூரியன் ஏழு குதிரை பூண்டவொரு ஆழித் தேரிலே சஞ்சரிப்பன். தினத்தைச் செய்தலால் தினகர னென்றும், பிரபையைச் செய்தலாற் பிரபாகர னென்றும் பிறவுமாக அநந்த நாமங்களைப் பெறுவன். இவ்வண்டம் சூரியனை ஆதாரமாக வுடையது. சூரிய துருவனை யாதாரமாக வுடையது.

சூரியனைக் குறித்து விஷ்ணு புராணத்திற் கூறப்பட்டனவற்றை இங்கே சங்கிரகித்துக் கூறுவாம். அதிற் கூறப்பட்டன ஐரோப்பிய சித்தாந்தத்திற்குப் பெரும்பாறு மொத்தன. முற்று முருவகமாதலின் நுண்மையா னுரைக்கப்படும்.

துருவனை யாதாரமாகக் கொண்டு அவனாலே ஆட்டப்பட்டு அவனையே வலஞ் செய்து வருதலைத் தொழிலாக வுடைய சூரியனுக்கு ஓரிரதமுண்டு. அவ்விரதத்திற்கு ஓரச்சும், அவ்வச்சிலே ஒருருளும், அவ்வுருளி னிரு மருங்கிலும் அச்சிலே கோக்கப்பட்ட பூட்டுக் கோலாகிய கொடிஞ்சிகளும் அவற்றின்மீதே பாரும், அதன்மீதே தட்டும் உறுப்புக்களாக வுள்ளன. கொடிஞ்சிகளிலே ஏழு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். காயத்திரி, பிருகதி, உஷ்ணிக்கு, ஜகதி, திருஷ்டுப்பு, அநுஷ்டுப்பு, பங்தி என்னும் பெயர்களையுடைய சந்தங்கள் ஏழுமே அவ்வேழு குதிரைகளுமாம். அவ்வுருளி னொருபக்கத் தச்சு மிக நீண்டிருக்கும். மற்றப் பக்கத் தச்சு மிகக் குறுகியிருக்கும். அவ் வுருளினது பண்டி காலை நண்பகல் மாலை என்னும் பிரிவுகளா லாயது. சம்வற்சரம், பரிவற்சரம், இடாவற்சரம், அநுவற்சரம், இத்துவற்சரம் என்னும் ஐந்து உருளாரங்களாம். இருதுகள் ஆறும் உருள் வலயங்களாம். குறுகிய அச்சுப் பக்கம் துருவ பக்கத்தை நோக்கி நிற்கும். அவ்வச்சுத் துருவ நக்ஷத்திரத்தி லிருந்து வரும் வாயு வடிவினவாகிய கயிறுகளிலே தொடுக்கப்பட்டிருக்கும். உருளை மானசோத்தர பர்வதத்தின்மீதே சஞ்சரித்து வரும். அப்பர்வதத்தின்மீது கிழக்கில் இந்திரனுக்குரிய வசுவோக சாரா நகரமும், தெற்கில் யமனுக்குரிய சம்யமனி நகரமும், மேற்கில் வருணனுக்குரிய சுகா நகரமும், வடக்கிலே சோமனுக்குரிய விபாவரி நகரமுமென நான்கு நகரங்களுள. சூரியன் இவ்விரதத்திலே சஞ்சரித்து வருதலால் உதயாஸ்தமயங்களுண்மைபோல நமக்குத் தோன்றினும். சூரியன் உண்மையளவில் உதிப்பதும அஸ்தமிப்பதுமில்லை. சூரியன் மேலே கூறப்பட்ட நான்கு கோணத்து நகரங்கள் நான்கனுள் எதிலாயினும் இடையிலாயினும் இருக்கும்போது இரண்டு கோணங்களுக்கும் இரண்டு நகரங்களுக்குந் தரிசனமாவான். சூரிய கிரணங்கள் செல்லாதவிடம் மேருபக்க மொன்றுமேயாம், அப் பக்கஞ் செல்லும் சூரியகிரணங்கள் மேருவினது கிரணங்களாலே திரஸ்கரிக்கப்பட்டு மீளும்.

சூரியரதஞ் சஞ்சரிக்கிற கிராந்தி விருத்தங்கள் நாற்றெண்பத்துமூன்று. அவை தக்ஷிணாயன உத்தராயண வெல்லைகளுக் கிடையேயுள்ளன. இரதம் அக்கிராந்தி விருத்தங்களிலேயே உத்தராயணத்திலேறுவதும் தக்ஷிணாயனத்தி லிறங்குவதுமாயிருக்கும். அதனால் ஒரு கிராந்தி விருத்தத்திற்கு இரண்டாக முந்நூற் றறுபத்தாறு கதிகளினுலே ஒரு வருஷ முண்டாகும். மாசந்தோறுஞ் சூரியன் தன் இயல்பு வேறுபடலால் பன்னிரண்டு பெயர்களைப் பெறுவன். அதுபற்றிச் சூரியர் பன்னிருவராகக் கொள்ளப்படுவர். சூரிய ரதத்திலே சூரிய ரிஷி கந்தருவ அப்சர யக்ஷசர்ப்ப ராக்ஷச கணங்கள் ஏழும் ஏறியிருக்கும். சித்திரை மாசத்திலே தாதா வென்னுஞ் சூரியனும், கிருதஸ்தலை யென்னும் அப்சரப் பெண்ணும், புலஸ்திய விருஷியும், வாசுகி சர்ப்பமும், ரதபிருத்து வென்னும் யக்ஷனும், ஹேதிராக்ஷசனும், தும்புரு வென்னும் கந்தருவனும் அவ்விரதத்திலே வசிப்பார்கள். வைகாசியிலே சூரியன் அரியமா, இருஷிபுலகர், அப்சரசு புஞ்சிகஸ்தலை, யக்ஷன் ரதௌஜா; சர்ப்பம் கச்சவீரன்; கந்தருவன் நாரதன்; ராக்ஷசன் பிரஹேதி. இவ்வாறே ஏனைய மாதங்களிலும் வேறு வேறு பெயர்களைப் பெறுவர்.

சூரிய ரதத்திலுள்ள இவ்வேழு கணங்களும் இப் பூமியிலேயே மழை பனி வெயில் சுகம் விருத்தி பஞ்சம் நோய் முதலியவற்றிற்குக் காரணராய்க் காலபேதங்களை யுண்டாக்குவர். சூரியனை அவ்விரதத்தி லிருக்கும் இருஷிகள் தோத்திரஞ் செய்து கொண்டிருப்பார்கள்; (கஉ௦-ம் பக்கம் பார்க்க)

---

புராதன ஸம்பிரதாய மென்பதால் மட்டுமே ஒன்று பொய்யாய் விடமாட்டாது; புதிய தென்பதால் மாத்திரமே ஒன்றை மெய்யாகக் கொண்டு விடுவதும் பிழை. ஆராய்ந்து, அனுபவத்தால் பார்க்கும்போதுதான், ஒரு விஷயத்தின் மெய்ம்மையும் பொய்ம்மையும் விளங்கும். நமது முன்னோர்கள் "யோகம்" என்றதோர் மார்க்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது ஹடயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம், என நான்கு வகைப்படும். இவற்றில் ஹடயோகந்தான் மிகக் குறைந்த பயன் தரக் கூடியது; மற்ற மூன்றிலும் அனந்த சக்திகள் பெறலாம். விஷயம் தெரிய முன்பாகவே, 'இதில் பய னென்ன விளையப்போகிறது' என்று சந்தேகப்படுதல் தெளிந்தோர் செய்யுங் காரியமன்று. அவற்றை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்தவர்களுக்குப் பலவித அபூர்வ சக்திகளுண்டாயிருப்பதைக் கண்ணாரக் காண்கிறோம். நமக்கும் ஏன் இந்தச் சக்திகள் ஏற்படக் கூடாது? இந்த மூடத் தமோ குணத்தால் என்ன சுகங்கள் கண்டுவிட்டோம்? சோம்பாலும் அற்ப விஷயங்களிலே ஆசை கொண்டு மனதைக் கடலில் அகப்பட்ட துரும்பு போலச் சலிக்க விடுவதாலும் என்ன பேறுகள் பெற்று விட்டோம்?

துணிவு, உள்ளத் தூய்மை, ஏதாவதொரு மகத்தான லட்சியத்திலே அறிவை ஆணிகொண் டடித்தது போலப் பற்றுதல் செய்து கொள்ளுதல், லாப நஷ்டங்களிலே சிந்தனை இல்லாமை — இவைதான் யோகத்தின் இரகசியம்.

சிவதொண்டன்
SIVATHONDAN

விக்கிரம ஆண்டு, ஆவணித் திங்கள். [16-8-40]

## நிலையற்றவையும் நிலையுள்ளவையும்

"வியப்பி லிருந்தே தத்துவஞானம் ஆரம்பிக்கின்றது" என்று கிரேக்க தத்துவ ஞானியாகிய பிளேற்ரோ என்பார் ஓரிடத்துக் கூறியுள்ளார். வியப்பே மகனைச் சிந்திக்கவும் ஆராயவுஞ் செய்கின்றது. ஆயின், மக்களுள் எத்தனைபேர் தம்மைச் சூழ்ந்திருப்பவைகளைப் பற்றிச் சிந்திக்கின்றனர்? பண்டைக்கால இந்தியப் பெரியோர்களனைவரும் மகன் தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களைப் பற்றிச் சிந்தித்து ஆராயவேண்டுவதன் இன்றியமையாமையை நன்கு வற்புறுத்திச் செல்வாராயினர். என்னை? ஆராய்ச்சி யில்லாதவிடத்து மகன் நிலையற்றவை எவையென்றும் நிலையானவை எவை யென்றும் அறியுமாறில்லை யாகலின். நித்தியாநித்திய வஸ்து விவேகம் இல்லாதவிடத்து வைராக்கியம் ஏற்படாது; வைராக்கியம் ஏற்படாதவிடத்து ஆத்மீக வாழ்க்கை ஆரம்பியாது என்னும் சமய நூற்றுணிபு காண்க.

மக்களிற் பெரும்பாலோர் வாழ்க்கையில் மிகமிக அழுந்துவதால், வாழ்க்கை எத்தகையது என்பதைச் சிறிதும் சிந்தித்துப் பார்க்கின்றிலர். எல்லாவற்றையும் இயல்பானவையாக - நிலையானவையாக-கொண்டு வாழ்க்கையில் தமக்கேற்படும் அற்பகாரியங்களிற் றொடக்குண்டு கிடக்கின்றனர்.

"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்" என்பது குறள்.

நாட்கள் செல்லச் செல்ல மரணம் நம்மை நெருங்கி வருகின்றது. இதனை யாம் சிந்திக்கின்றிலேம். இன்பகரமாக எம் இலௌகீக வேலைகளைச் செய்யாநிற்கின்றோம். இஃது எம் அறியாமையாலே யாம். நாடோறும் கோடிக்கணக்கான மக்கள் பிறக்கின்றனர் என்றும் மற்றும் கோடிக்கணக்கான மக்கள் இறக்கின்றனர் என்றும் நாம் நினைந்து பார்ப்பதில்லை. வாழ்வினிறுதியில் மாத்திரம் இவ்வுலகப் பொருள்களனைத்தும் எமக்கு ஒரு பயனும் விளையாமற் போகக் காண்கின்றோம். ஆகவே, நாம் பொருளைவிட்டு, அதன் நிழலையே பற்றியவர்களாகின்றோம். அறிஞரோ-பெரியோரோ எம்மைப்போலப் பொருளை விட்டு வெறும் நிழலைப் பின்பற்றிச் செல்பவரல்லர். புறத்தே யாம் அநுபவிக்கும் இன்பத்தைச் சிறிது துருவி ஆராயுங்கால், அதையும் அவற்றைத்தரும் பொருள்களும் அழிதன்மாலையன என்னும் உண்மை புலப்படும். அவை நிலையில்லாதன என்று கருதுதற்குத் தானும் அவற்றின்மீது பற்றுள்ளம் படைத்த மகன் அஞ்சுகின்றான். நிலையில்லாதனவற்றை நிலையில்லாதவை என்று கூறுதற்கு யாம் பின்வாங்க முடியாது. உண்மை சிலருக்கு எத்துணைக் கசப்பாக இருந்தாலும் அஃது உண்மையேயாம்.

நோய், பொருளிழத்தல், வறுமை, எடுத்த கருமங்களிற் சித்தி பெறாமை, வசதியீனங்கள் முதலியவை நேருங் காலத்திலேயே சிலர் மனம் மடிந்து சோர்வுற்று "உயிர் வாழ்தலே கஷ்டமாக இருக்கின்றது" என்று வாழ்க்கையில் வெறுப்புக் கொள்கின்றனர். ஆயின், உலக இன்ப துன்பங்கள் சகடக்கால்போல மாறி மாறி வருதலே அவற்றின் இயல்பாம் என்று கண்டு அவ் வின்ப துன்பங்களை ஒவ்வும் வகையிற் சமமாக ஏற்றுக் கொள்வதற்குப் பயின்று வருவோர் அவ்வாறு பெருங் கஷ்டமுற நேரிடாது. இன்பம் எவ்வாறு நீடித்து நிலையாக நிற்கமுடியாதோ அவ்வாறே துன்பமும் நீடித்து நிலையாக நிற்கமுடியாதென்றும், இன்பத்தைப் போலவே அதுவும் விரைவில் இறந்தொழியும் என்றும் அன்னோர் துணிந்துகொள்வர். நல்வினை விளையுங்கால், அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்தநுபவிப்பார் அனைத் தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறு அநுபவியாது துடைக்குந் திறன்நாடி அல்லலுழப்பது என்கருதி? என்னுங் கருத்துப்படத் திருவள்ளுவநாயனாரும்

"நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்" என்று கூறுதலை நோக்குக. இதிலிருந்து வள்ளுவப் பெருந்தகையாரின் உள்ள நிலையையும் ஓர்க.

உலகப் பொருள்களின் நிலையாமையை அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொள்வதால், ஒருவன் எளிதில் அவாவறுத்தலும் கவலையறுத்தலும் கைகூடும் என்க. என்னை? "அற்றவரென்பார் அவாவற்றார்" ராகலின்.

"அவாவென்ப வெல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து" என்னும் வாக்கும் நோக்குக. இவ்வாறு அவாவற்ற - கவலையற்ற வாழ்க்கையை நடாத்துவோரே ஆத்மீக வாழ்க்கையில் மிக உன்னத நிலையை அடையவல்லராவர்.

உலகப் பொருள்களனைத்தும் மாற்றத்தை யடைவனவென்றும், ஊறடைவன வென்

றும், இறந்தொழிவன வென்றும் நன்குணர்ந்த ஒருவன் உலக இன்பங்களில் தன்னை மறந்து முற்றும் மூழ்கிவிட மாட்டான். என்னை? அவ் வின்பம் சிறிது பொழுதுக்கு மாத்திரமே நிலைக்கும் என்பதை அவன் உணர்வானாகலின்.

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்"

[பளிக்கறை புக்ககாதை, கக௩-கஉக]

என்றும்,

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்"

[சிறைசெய்காதை, கஙசு-கஙஅ]

என்றும்

மணிமேகலை ஆசிரியர் கூறுகிற்பர்.

சாந்தோக்கியோபநிடதத்திலும் "ஓ இந்திரனே! இந்த யாக்கை அழிதன்மாலையது; ஆதலால் நிலையற்றது. ஆயின், அஃது அழியாத - அஃதாவது நிலையுள்ள - ஆன்மாவுக்கு உறைவிடமாக இருக்கின்றது. ஆன்மா யாக்கையிற் பிணிப்புண்ட காலத்தில் மாத்திரமே இன்பத்தையுந் துன்பத்தையுந் துய்க்கின்றது. ஆயின், ஆன்மாவுக்கோ இன்பமும் இல்லை துன்பமும் இல்லை." என்று கூறப்பட்டிருத்தல் காண்க. மேலும், தன்னையுணர்தலே மகனது இலக்காக இருத்தல் வேண்டுமென்றும் அவ்வுபநிடதம் கூறுகிற்கும்.

'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன(து)
அற்றோ ருறுவ தறிக"

[ஊரலருரைத்தகாதை, சுச-எ]

என்னும்

மணிமேகலையடிகள் பிறவி துன்பமயமானது என்றும் அப் பிறவிதானும் பற்றினல் உண்டாவதென்றும் பற்றற்றோரே பிறவி நீங்கப் பெறுவரென்றும் அவர் அநுபவிப்பதே பேரின்பமென்றும் கூறுதல் காண்க. ஆகவே, நிலையானவை எவையென்றும் நிலையற்றவை எவையென்றும் உணரும் உணர்ச்சி மகனுக்கு இன்றியமையாததாகும். என்னை? அஃது உணர்ந்தவழி யல்லது பொருள்களிற் பற்று விடாதாகலின்.

நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலில்லாத்தன்மை என்று கூறுவர் ஆசிரியர் பரிமேலழகர். மயங்கிய விடத்துக் கானலில் நீர்போலத் தோன்றி, மெய்யுணர்ந்த விடத்துக் கயிற்றி லரவுபோலக் கெடுதலினல் பொருள் பொய் என்பர் ஒருசாரார். நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறக்குமென்பர் பிறிதொருசாரார். ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உண்மையினல் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடையது என்பர் மற்றொருசாரார். இவ்வாறு பொருளின் பெற்றி கூறும் பல்வேறு திறத்தினர்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடேயாம். ஆகலின், இதனை உணரவேண்டுவது மகனுக்கு மிகமிக இன்றியமையாததாம் என்க.

# நற்சிந்தனை

இ-ம் : சுருட்டி. தாளம் : ஆதி.

**பல்லவி**

இராஜாதிராஜன் ஸ்ரீநடராஜன்

**அநுபல்லவி**

ஆசாபாச மகற்றும் அன்பு விலாசன்

**சரணங்கள்**

மாசில்லா மாதவர்தம் மனத்திற்பிர காசன்
மறுமைக்கும் இம்மைக்கும் இவனென் சிநேகன்
-இராஜா

தேசம் புகழுந்திரு வண்ணையில் வாசன்
சிவகாமி யம்மை சேவிக்கும் நேசன்
-இராஜா

# பஞ்சகிருத்தியகருத்தா

பஞ்ச கிருத்தியங்களாவன :— சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்பன. இவற்றைச் செய்யுங் கருத்தார் சிவபெருமானே. சிவபெருமான் இவ்வைந்து கிருத்தியங்களையுந் தம்பொருட்டன்று; ஆன்மாக்களாகிய பிறர் பொருட்டே செய்கின்றார். செய்யும்வழிப் பிரமா விட்டுணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவகை வடிவங்களைக் கொள்கின்றார். இங்ஙனம் ஐவகை வடிவங்கொண்டு சிவபெருமான் ஐந்தொழில் புரியுமிடம் சுத்தமாயா தத்துவமே.

வினை அசுத்த மாயையிற் கிரியைகளைத்தையுஞ் சிவானுக்கிரகத்தால் அநந்தேசுவரரே செய்வார். பிரகிருதியின் கீழுள்ள கிரியைகளைச் ஸ்ரீகண்டருத்திரரே செய்வார். இங்கே விநாயகர் வைரவர் வீரபத்திரர் சுப்பிரமணியர் என்னும் நால்வருமே யன்றிப் பிரம விட்டுணுக்கள் ஸ்ரீகண்டர் தேகற்றமா யுள்ளவரல்லர்; அவர்கள் வேறே. இக் குணதத்துவத்தில்யாந் தத்துவாதீத பரமசிவ வழிபாடு செய்த வழியும் எமக்கு எவ்வித பயனையும் அருளுமூர்த்தி ஸ்ரீகண்டசிவனே. இங்கே எப்புவனோர் பலராலுஞ் சிவபெருமான் என்று புகழப்படு மூர்த்தி ஸ்ரீகண்ட சிவனே. சிவனருளாற் சிவாதிக்கத்தைப் பெற்று, திருமல மூர்த்தியாய்க் கிரியை நடாத்துதலின் ஸ்ரீ கண்டர் சிவனே யாவர். "குன்றா வருண்மூலங் கிகழ்குறி யாகிய சுடரும் - மன்றாகிய வெளியுடு மகிழ்ந்தாடிய வொளியும் - ஒன்றாகிய வருபூதியி னுற்றார்" திருவாதவூ ரடிகள். குறியாகிய சுடர் - சதாசிவம். மகிழ்ந்தாடிய வொளி - ஸ்ரீகண்டசிவம். இங்கே காலாரி, காமாரி, திரிபுராரி முதலாகக் கருதப்படும் வடிவங்களும் ஸ்ரீகண்டர் வடிவபேதமே. "அரனுமா பதிசிவன் பேரறு பத்தா றனந்த பதமும்" என விதந்த நாமங்களும் ஸ்ரீகண்ட சிவநாமமே. இந் நாமங்களாற் பரசிவனைப் போற்றினும் பாற்படு மென்க. இவ்வுண்மை புணராமாட்டாதார் சகல வருக்கத்து ஆன்மாக்களாகக் கருதப்படும் குண தத்துவப் பிரம விட்டுணுக்களைச் சிவபேதமாகிய மகேசுவர மூர்த்திகளாகக் கூறுவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவவினா விடையே இவற்றை நன்கு விளக்கும் ஊசாபோகப் உவதாயின், எடுத்தோதுப வன்கையாற் பஞ்ச கிருத்திய கருத்தா மூவராவார் ;- பரசிவன் அநந்தேசுவர சிவன் ஸ்ரீ கண்ட சிவன் என. உண்மை உணர வல்லார்க்கு மூவரும் ஒருவரே. கைலாசபதி எனக் கேட்கப்படுபவர் ஸ்ரீ கண்ட சிவனே. உமாபதி எனப்படுபவரும் அவரே. "குறித்ததொன் றாக மாட்டாக் குறையிலன் ஒருவனே - நிறாத்தாது ஈனைந்த மேனி நின்மல னருளினாலே", இதுவும் சிவமூர்த்தி மூவர்க்கும் பொதுவே.

## சூரியன்

(கஎ0-ம் பக்கத் தொடர்ச்சி)

அரம்பையர் ஆடிக் களிப்பிப்பர்; ராக்ஷசர் பின்றொடர்ந்து நிற்பர்; சர்ப்ப கணங்கள் தாங்குவர்; யக்ஷர் கடிவாளம் பிடித்து நிற்பர்; கந்தருவர் பாடிக் களிப்பிப்பர்; சூரியன் அண்டத்தைக் காப்பன்.

மேலே எழுதனவென ரூபகம் பண்ணப்பட்டன சூரியனிடத்திலே யுள்ளனவாய் விளங்குகின்ற ஆற்றல்களேயாம். இருவிக ளென்பது, ஒளியைக் கொடுத்துலகத்தை அதற்குரிய வியாபாரத்தைக் கேவிக்கும் சத்தியைப் பொலும், அரம்பைய ரென்றது இருளை. சர்ப்ப கணமென்றது சூரிய வீதியை. அது பற்றியே அதற்கு நாக வீதி யெனப் பெயர் வந்ததுமா மென்க. யக்ஷர் கடிவாளம் பற்றி நிற்ப ரென்றது சூரியனை. உரியகதியிற் பிறழாது காக்குஞ் சத்தியை. கந்தருவர் பாடிக் களிப்பிப்பர் என்றது அணுக்களைக் கவரும் சத்தியை. சூரியன் அண்டத்தைக் காப்பன் என்றது அண்டங்களெல்லாந் தன்னை வலம் வருமாறு செய்து அவைகட்கெல்லாம் தான் காரணமாய் நிற்கும ஆற்றலை. இனி மான சோத்தர பர்வதமென்றது சூரியன் சஞ்சரிக்கும் வீதியினது நிலையை. சூரியன் அவ்வுயர்ந்த நிலையிற் கீழே பூமியை நோக்கி யிறங்காமலும் அந் நிலையினின்று மேலே யுயராமலும் சமமாகிய ஒரு மலைபோன்ற மதிற் சுவரின் மீதே சஞ்சரிப்பது போலச் செல்லுதலின் அந்நிலை மலையெனப்பட்டது. மானசுக்குமேட்டா துயர்ந்த மலையென்பது அதன் பொருள். நான்கு நகரமென்றது: உதயம், உச்சி, அஸ்தமயம், அர்த்தயாமம் என்னும் நான்கு கோணங்களையுமாம். உதயகோணத்தை இந்திரனுக்குரிய வசுவோக சாராநகரமென்றது பொன் மயமாகிய வெளியும் புள்ளொளியும் முதலிலே புலப்படுகின்றமை பற்றியாம். வெளிக்கிறைவ னிந்திரனாதலின் இந்திரனுக்குரிய தெனப்பட்டது. உச்சிக்கோண நகரம் யமனுக்குரிய தெனப்பட்டது. வெயில் மிகக் கொடிதாதலும் உயிர்களுக்குப் பசி தாகங்க ளுளவாதலும் பற்றியாம். அஸ்தமய கோணத்தை வருணனுக்குரிய தென்றது சூரியன் அவ்விடத்தை யடையும் போது பூமி குளிர்ச்சியும் சோக நீக்கமும் பெறுதலால், தண்ணென்ற சுபாவத்தை யுடைய நீருக்கிறைவன் வருணனேயன்றோ. வடக்கென்றது அர்த்தபாகத்தை. சூரியன் அர்த்த பாகத்திலிருக்கும் போது ஊர்த்துவ பாகத்திலுள்ள வுயிர்களுக்குக் களிப்பையும் நித்திரையையுங் கொடுத்தல் பற்றி அக்கோணம் சோமனுக்குரியதெனப் பட்டது. எம்பரியை எழ்நிறமென பாரு மூளர்.

இவை ஒருவாறு விரிக்கப்பட்ட வுள்ளுறை. அவ் வுருவங்களை முற்ற நிதானித்துத் தத்துவங் காட்டல் மகா பண்டிதர்க்கன்றி மற்றோர்க்கு சாத்தியமாம்.

# சைவ சமய விளக்க வினாவிடை

(க0ரு-ம் பக்கத் தொடர்ச்சி)

(கஎ) எழுவகைப் பிறவிகளாவன யாவை?

தேவர், மானுடர், விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்பனவாம். இவற்றுள் முன் நின்ற ஆறும் இயங்கியற் பொருள் எனவும் சரம் எனவும் படும். பின்னின்ற ஒன்றும், நிலையியற் பொருள் எனவும் அசரம் எனவும்படும்.

(கஅ) இவற்றுள் கருப்பையிலே பிறப்பன யாவை?

தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளுமாம்.

(ககூ) முட்டையிலே பிறப்பன யாவை?

பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுமாம்.

(உ0) வேர்வையிலே பிறப்பன யாவை?

கிருமி, கிடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம்.

(உக) வித்தினும், வேர், கொம்பு, கொடி, கிழங்கினும் பிறப்பன யாவை?

தாவரங்கள்.

(உஉ) எழுவகைப் பிறவியின் வரும் எண்பத்து நான்கு நாறுயிர யோனி பேதங்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 1. | தேவர் | கக, 00, 000 | யோனி பேதம் |
| 2. | மனிதர் | கூ, 00, 000 | ,, |
| 3. | நாற்கால் விலங்கு | க0, 00, 000 | ,, |
| 4. | பறவை | க0, 00, 000 | ,, |
| 5. | ஊர்வன | கரு, 00, 000 | ,, |
| 6. | நீர்வாழ்வன | க0, 00, 000 | ,, |
| 7. | தாவரம் | ககூ, 00, 000 | ,, |
| | ஆக | அச, 00, 000 | |

## பாசவியல்.

(க) பாசமாவது யாது?

ஆன்மாவைப் பந்திப்பது.

(உ) பாசம் எத்தனை வகைப்படும்?

ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மாயேயம் திரோதாயி என இரண்டு கூட்டி ஐந்து எனவும்படும்.

(ங) ஆணவமாவது யாது?

ஒன்றேயாய், ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய், செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களுடைய அறிவையும் தொழிலையும் மறைத்து நின்று தத்தம் கால வெல்லையிலே நீங்கும் (அந்தந்த ஆன்மாக்களின் பரிபக்குவ காலம்வர நீங்கும்) அனேக சக்திகளையுடையதாய்ச், சடமாயிருப்பது.

(ச) கன்மமாவது யாது?

ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்கள். (கன்மம் - தொழில்)

(ரு) இக் கன்மம் எத்தனை வகைப்படும்?

ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தம் என மூவகைப்படும்.

(சு) ஆகாமிய மாவது யாது?

எடுத்தபிறப்பிலே செய்யப்படும் புண்ணிய பாவங்கள்.

(எ) சஞ்சிதமாவது யாது?

கழிந்த பிறவிதோறும் ஈட்டப்பட்டுப் பக்குவப்படுமளவரையும் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும் புண்ணியபாவங்கள்.

(அ) பிராரத்துவ மாவது யாது?

எடுத்த பிறப்பிலே அனுபவிக்கப்படும் இன்ப துன்பங்களைத் தருவன.

(கூ) மாயை யாவது யாது?

மலத்தால் மறைக்கப்பட்ட ஆன்மாவின் அறிவையும் தொழிலையும் சிறிது விளக்குவதாயும் அவற்றிற்குத் தனு கரண புவன போகங்களாயும், நித்தியமாயும், சடமாயுமிருப்பது.

(க0) மாயை எத்தனை வகைப்படும்?

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்று வகைப்படும்.

(கக) சுத்த மாயை யாவது யாது?

நித்தியமாய் வியாபகமாய் அருவமாய் சடமாய் சொல் வடிவமும், சுத்தமாகிய பொருள் வடிவமும் தோன்றுதற்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்யாததாய் இருப்பது. (இது குண்டலி சத்தி எனவும் பெயர் பெறும்)

(கஉ) அசுத்த மாயை யாவது யாது?

நித்தியமாய் வியாபகமாய் அருவமாய் சடமாய் பிரளய காலத்திலே ஆன்மாக்களுக்கு உறைவிடமாய் ஆன்மாக்களுக்குச் சுத்தாசுத்தமும் அசுத்தமுமாகிய தனுகரணபுவன போகங்கள் தோன்றுதற்கு முதற் காரணமாய் மயக்கஞ்செய்வதாய் இருப்பது.

(கங) பிரகிருதி தத்துவமாவது யாது?

மேற் கூறிய அசுத்த மாயையிற் றோன்றிக் குணவடிவாய்ப் புத்தி முதலிய அசுத்த தத்துவங்கள் தோன்றுதற்குக் காரணமானது.

(கச) மாயேய மாவது யாது?

மாயையாலாகிய தத்துவங்களும், தனு கரண புவன போகங்களுமாம்.

# உய்யும்வழி

## பாடற்றிரண்டு

"வேண்டினின்ற முடித்தவேணி விண்ணவ ரன்பிலாத - பண்பினரெனினுந் தம்மைப் பாடினர்க்கிரங்கும்" என்றலின் இயன்றவாறு பாடுதல் நலனே

### அடைக்கலப்பத்து

அன்புரு வாகி யகநெகிழ்ந் துருகி யடிமல ரருச்சனை புரியேன்
பொன்பொலி கொன்றை மத்தமோ டெருக்குப் புனைதரு புனிதனே பிழைக
ளென்பவெத் துணையுஞ் செய்திழுக் குற்றே னேறுமோர் துறைநெறி யறியேன்
வன்பெறு மடியே னுய்யுமா றருள்தீ வண்ணநின் னடியடைக் கலமே.

சிந்தனை புரிவார் சிந்தையு ளூறுந் தெள்ளமு தேயருந் தேனே
யெந்தையெம் பெருமான் வஞ்சமாம் பிறவிக் கரைதனி லேறுமா றுணரேன்
வந்தனை புரிந்துன் மலரடி புனையா வைகினே னும்பில மடியே
னெந்தநா ளுன்சீ ரடைவதொன் றறியே னிறைவநின் னடியடைக் கலமே.

இருளெலாந் திரண்டோ ருருவுகொண் டாற்போ லென்னகந் தானிட னாக
மருளெலாந் திரண்டு குடிகொளப் பெற்றே னென்செய்வேன் மாசிலா மணியே
யருளெலாந் திரண்ட வுருவுடை யானே யத்தனே யடியவர்க் கெளியாய்
தெருளெலாம் புகவென் சிந்தையுள் வாமெய்த் தேவநின் னடியடைக் கலமே.

மன்னுயிர்க் குயிரா யிருந்தறி வுதவி வாழ்க்கையை நடாத்திவாழ் வரதா
என்னுயிர்க் குயிராய் நின்றெனைத் தீய நெறிதவிர்த் தருளுகின் றிலையால்
அன்னையோ டப்ப னுவைநீ யிதனை லடியனுன் சிறுவனே யன்றே
துன்னரு னுடையா யென்னைவிட் டிடாதே சோதியுன் னடியடைக் கலமே.

காதலாற் றொழுமுன் னடியவ ரகத்துக் கரும்பினல் லிரதமாய்க் கனியாய்
ஏதம தகற்று மருந்துமா யினிக்கு மிறைவநின் னைந்தெழுத் தோதித்
தீதறுந் துன்பொற் றிருவடி சேராத் தீவினை யென்சிதை யுளத்துப்
போதமாய் முளைத்துன் னியலளித் தருள்வாய் புனிதநின் னடியடைக் கலமே.

முட்டிலா துன்னைப் பாடுவா ரகத்து முடிவிலா ஞானமாய் முளைத்துத்
தட்டற நின்று பாடியே யருளுந் தற்பரா தயவுகொண் டருளும்
அட்டமூர்த் தமுமாய்ப் பிறவுமா யமரு மமலவா னந்தமெய்ப் பொருளே
சிட்டனே னகத்தும் புகுந்துநின் றருண்மெய்த் தேவநின் னடியடைக் கலமே.

(வரும்)

# குன்றுடையானும் மக்களும்

(ககஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னண்ணன், அப்பா! 'இது ஒரு பெரியகாரியமா? அம்மரத்திலுள்ள கிளிகள், அவ்வனத்திலுள்ள மிருகங்கள் ஆகிய எல்லாவற்றையும் வேண்டுமாயின் கொணர்ந்து கொடுப்பேனே' என்றான்.

பின்பு தங்கை பெரியண்ணன் பக்கலில் திரும்பி 'அண்ணா, இப்பொற்கிளிகள் இருக்கும் இடத்தைப் பற்றி விசாரித்தேன். விராமலைக்குத் தென்புறத்தில் ஒரு கற்பாறை தெரிகின்றதாம். அத்தப் பாறை வழியாய்ச் சிறிது தூரம் சென்றால் ஒரு புன்னைமரத்தைக் காணலாமாம். அம் மரத்தைக் கடந்து இன்னும் சிறிது தூரம் போனால் அங்கே உப்பிலியன் திட்டு இருக்கின்றதாம். அதற்கப்பால் பெரிய ஆலமரம் ஒன்று நிற்கின்றதாம். இம்மரத்தில் கூடுகட்டி அவ்வரசகிளிகள் தம் பரிவாரத்தோடு வாழ்கின்றனவாம். எங்ஙனமாயினும் அப்பெண்கிளியைக் கொண்டு வந்து எனக்குக் கொடுக்க வேண்டும்' என்றாள்.

பெரியண்ணன், 'அம்மா, செல்வத் தங்கையே, நீ விரும்பியவாறே கிளியைப் பிடித்துக் கொண்டு வந்து தருகின்றோம். வேட்டையாட்கள் வேளாண்குளத்தருகில் காத்திருக்கின்றனர். நாங்கள் போய் வருகின்றோம், விடை கொடம்மா' என்று சொல்லித் தம்பியோடு எழுந்து நின்றார்.

அங்கை, அண்ணன்மார் அடிதொட்டுக் கும்பிட்டு ஆசிபெற்று, அரண்மனை வாயில் வரையிலும் பின்தொடர்ந்து வந்து நின்று "அண்ணன்மார்களே! வேடுவர் எல்லைக்குட் புகுந்து வேட்டையாடச் செல்கிறீர்கள். வேடுவர் கொடியவர் என்று கேள்விப்படுகின்றேன். அன்றியும் கிளிகளுக்குக் காவலிருப்பது ஒரு வேங்கைப் புலியாம். எச்சரிக்கை! சென்று வாருங்கள்" என்று விடைகொடுத்துத் திரும்பினாள்.

வேளாண்குளக் கரையில் சனக் கூட்டமும் நாய்க் கூட்டமும் கண்ணுக்கு எட்டிய வரையிலும் பரவியிருந்தன. பறையும் தம்பட்டமும் முழங்கின. குதிரைகள் நின்று கனைத்துப் பொறுமை யிழந்து தம் கால் குளம்புகளினால் நிலத்தைக் கிளறிப் புழுதியைக் கிளப்பின. வேட்டைக்காரர் கொணர்ந்த வில்லும் அம்பும் வேலும் வாளும் குத்தீட்டியும் தலை மயங்கி யுராய்ந்து ஒல்லென ஒலித்தன.

அண்ணன்மார் வேளாண்குளக் கரையை யடைந்து, ஆட்களையும் நாய்களையும் திரட்டிக் கொம்பினை ஊதி, தாம் முன்னணியில் நின்று கூட்டத்தை நடத்துவித்துக் கொண்டு விராமலைக் காட்டுக்குப் போய்க் கூட்டத்தைக் கலைத்து நாற்றிசையும் அனுப்பி, மயில் குயில் புறா மான் முதலியவைகளை வேட்டையாடினர்.

பின்பு மேற் சென்று, தங்காள் சொல்லிய வழியே போய், புன்னை மரத்தையும் உப்பிலியன் திட்டையும் கடந்து ஒரு சிற்றாற்றின் கரையை அடைந்தனர். இதற்குள் உச்சி வேளையானமையின் எல்லோரும் மர நிழலில் தங்கிச் சிறிது இளைப்பாறி, கட்டிச் சாதம் உண்டனர்.

அவ் வாற்றின் மருங்கினில் ஓங்கி வளர்ந்த மூங்கில் மரங்கள் நெருங்கி யிருள் செய்தன. அம் மூங்கில் வனத்துக் கப்பால் கிளிகள் வசிக்கும் ஆலமரம் நின்றது. அம் மரத்தைச் சுற்றி விழுதுகள் தரையைக் கிழித்து உள்ளே சென்று தாய் மரத்துக்குத் தக்க ஊன்று கோல்களாயப் பருத்து வளர்ந்து கண்ணுக் கெட்டிய வரையிலும் ஆகாயத்திலே பச்சைப் பந்தர் இட்டதுபோற் பரவி, இலையும் கிளையும் காயும் கனியும் அடர்ந்து பல்லாயிரங் கிளிகளுக்கு உறைவிடமாய்த் திகழ்ந்தன.

அம் மரத்தின் கனுக்கள் பதினாயிரம். ஒவ்வொரு கனுவினின்றும் கிளைகள் பிரிந்து நாற்றிசையிலும் பரவியிருந்தன. தாய் மரத்தின் உயர் கொம்பிலே, தாக் சென்று தனியாயமைந்த கூட்டிலே அரச கிளிகள் வதிந்திருந்தன.

மத்தியானமானமையால் அரச கிளிகள் தம் கூட்டிலே சிறிது கண்ணுறங்கின. உறங்குகையில் பெண் கிளியாகிய பொற்கிளி, தான் தனது காதலனைப் பிரிய நேர்ந்தபடி கனவு கண்டு, துயில் நீங்கி மருண்டெழுந்து புரண்டு, அருகில் தன் மருங்கணைந்து துயிலும் கணவன்மீது தன் மெல்லிய சிறகுகள் படிய முகத்தோடு முகம் வைத்துத் தன் செவ்விய மூக்கினால் கணவனது கொண்டையை அலைத்தது. ஆண்கிளி கண் விழித்துக் காதலியின் மூக்கோடு தன் மூக்குரைய, "என் கண்ணே! என்னை எழுப்பினாய்?" என்றது. பொற்கிளி, 'காதலா! எனக்குச் சிறிது அச்சந் தோன்றுகிறது' என்று மெல்லிய குரலிற் பேசி, தனது முகத்தைக் கணவனது இறக்கைக் குள்ளே ஒளித்தது. ஆண்கிளி தன் மூக்கினால் பொற்கிளியின் மூக்கைப் பற்றி உயர்த்தி, 'என் அன்பே! உன் அச்சத்துக்குக் காரணம் யாது? நானிருக்கையில் நீ பயப்படலாமா?' என்று கண்ணோடு கண்வைத்துக் காதலியை மெல்ல வினவிற்று. பொற்கிளி சிறிது வெட்கி, 'இல்லை. உன்னை விட்டு நான் பிரிந்ததாக இப்பொழுதோர் கனவு கண்டேன். அதுமுதல் அக்கனவை நினைக்கவும் என் மனம் திடுக்கிடுகிறது' என்றது. ஆண்கிளி இதைக் கேட்டு மூன்று முழ உயரங் குதித்துச் சிறகுகளை விரித்தபடியே காதலிக்கு முன்புறத்தில் உட்கார்ந்து, காதலியைத் தன் சிறகுகளால் மூடி, "கண்ணே! விரதங்கள் உள்ள பட்டும் நமக்குப் பயமேது? சீ! என்ன பேதைமை! உன் நினைவை ஒழி' என்று தேறுதல் சொல்லி, தலை கவிழ்ந்திருக்கத் தன் காதலியின் நுனி மூக்கைத் தன் மூக்கின் நுனியாற் பற்றி அப்புறமும் இப்புறமும் அசைத்தது. பொற்கிளி சிறிதுநேரம் ஒன்றும் பேசாமலிருந்து காதலன் கழுத்தின்மீது முகக்காதத் தன் மூக்கை வைத்து, 'அன்பா! நாம் இவ்விடத்தினின்றும் நீங்கிப் போவோம் வா" என்றது. ஆண்கிளி நகைத்து "என் கிளியே! உனக்குப் பைத்தியம் பிடித்தது போலும்? நமக்குத் தீங்கு செய்வார் யாவர்? நாம் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்? ஒருவேளை நமக்கு மனிதரால் தீங்கு நேரிடுமென்று நினைப்பாயாயின் நமக்குக் காவலிருப்பது விரதங்கள் நியமித்த வேங்கைப் புலி என்பதை மறவாதே. நமக்கு எக்காலத்தும் ஆபத்து வாராது; நாம் இவ்விடத்தை விட்டுப் போவோமாயின் ஒருகால் ஆபத்து நேரினும் நேரும்; என் அன்பே! இக்கிளையை விடுத்து அடுத்த கிளைக்குப் போவோம் வா. நீ அங்கே கக

மாய்த் தூங்கலாம் நான் காவலிருக்கிறேன்" என்று சொல்லித் தன் காதலியை அழைத்துக் கொண்டு மறு கிளைக்குச் சென்று, அங்கே அதைத் துயிலப் பண்ணித் தான் காவலிருக்கையில் மெய்ம் மறந்து தானும் துயின்றது. மற்றைக் கிளிகளும் சிறிது கண்ணயர்ந்தன.

## அண்ணன்மார் வரலாறு

### கிளிப்போர்

அண்ணன்மார் கட்டிச் சாதம் உண்டபின் ஆட்களுடன் ஆற்றங்கரை யோரமாக நடந்து மூங்கில் வனத்தைக் கடந்து ஆலமரத்தைக் கண்ணுற்றனர். பெரியண்ணனையும் வேட்டையாள்களிற் பலரையும் மூங்கில் வனத்தில் மறைவாக நிறுத்தி வைத்து, சின்னண்ணனும் வலைஞர் சிலரும் ஓசை கேளாமல் நடந்து ஆலமரத்தை யணுகி நாற்புறமும் மரத்தின் மேல் வலை வீசினர். வீச் சொலியையும் கூண்டுகள் முறிதலையுங் கேட்டுக் கிளிகள் கண்விழித்து மயங்கின. மறுகணத்தில் அவை யாவும் வலைகளில் அகப்பட்டன. கிளிகளுக்குக் காவலிருந்த வேங்கை அன்று இரைதேடி நெடுந் தூரஞ் சென்றிருந்தமையால் கிளிகளுக்கு நேர்ந்த கேட்டை அது அறிந்திலது.

சின்னண்ணசாமி பொற் கூட்டோடு மரமேறினான். கிளிகள் மருண்டு மேலே பறந் தெழுந்து மீண்டும் வலைகளினுள்ளே வீழ்ந்தன. சின்னண்ணன் பொற்கிளியைப் பொற் கூட்டிலே அடைத்து மூடி, கூட்டைப் பெரியண்ணன்பா லனுப்பி விட்டு, கிளிகளிற் பற்றியிருந்த வலைகளை யெடுக்கும் பொருட்டு மற்றுஞ் சிலரோடு வேறு கிளைகளுக்குச் சென்றான். எண்ணிறந்த கிளிகள் வலைகளிலே தொங்குதலைக் கண்டு அவற்றைப் பற்றிப் பற்றிக் கீழே எறிந்தான். அக் கிளிகள் நிலத்தில் விழுமுன் சிறகுகளை விரித்துச் 'சின்னண்ணா! நீ எங்களரசியைச் சிறை கொண்டாய். நாங்கள் வீரதங்காளின் கிளிகள் என்பது உண்மையாயின், சிறைக்குச் சிறை மீட்போம்' என்று சொல்வனபோல் கத்திப் பொள்ளெனப் பறந்து வானத்தை மறைத்து வீரதங்காளின் அரண்மனையை நாடிப் போயின.

பின்பு சின்னண்ணன் வலைஞரோடு திரும்பி மூங்கில் வனத்தை யடைந்தான். தாம் வந்த காரியம் இனிது முடிந்ததென்று அண்ணன்மார் மகிழ்ச்சியுற்று, தம ஆட்களோடு சிற்றூலைப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் அம் மூங்கில் வனத்திற் பாதி வழியைக் கடந்து செல்கையில் பொன்னர் சங்கரை நோக்கி, 'தம்பி! ஆலமரத்தினடியில் ஒரு புலி கிளிகளுக்குக் காவல் புரியும் என்றும் தங்கை சொன்னாளே; அந்தப் புலி நம் கண்ணிற் படவில்லையே. அது எங்கே போயிற்று?" என்று வினவவும், தம்பி வாய்திறந்து மறுமொழி கூறுமுன் அப் புலி அங்கே தோன்றிற்று.

இரை தேடச் சென்றிருந்த வேங்கைப்புலி திரும்பி வந்தவுடன் கிளிகளைக் காணாது கோபங் கொண்டு கொட்டாவி விட்டுக் குறுவிழி விழித்து, வாலை யசைத்து, அங்கு மிங்கும் பார்த்து, மனிதர் காற் சுவடுகளைக் கண்டு மோப்பம் பிடித்து, சின்னண்ணன் சென்றவழி யோடிப் பாய்ந்து வந்து, சின்னண்ணன் கையில் பொற்கிளி கூட்டிலிருக்கக் கண்டு, "அடே சின்னண்ணா! நில், நில். நீ மீசை முளைத்த ஆண் பிள்ளையா? உன் திறம் நன்று நன்று! நானில்லாத வேளை பார்த்து வந்து இந்தக் கிளியைப் பற்றிக் கொண்டாயோ?" என்று சொல்வதுபோல் குமுறி, அவன் மீது பாய்ந்தது. ஆட்களிற் பலர் ஓடி ஒளித்தனர். சின்னண்ணன் கிளிக் கூட்டைப் பொன்னர் கையிற் கொடுத்து, குத்தீட்டி யெடுத்து வேங்கையை எதிர்த்தான். சின்னண்ணனுக்கும் புலிக்கும் அன்று பகல் முழுவதும் போர் நடந்தது.

வேங்கை பதுங்குகையில் சின்னண்ணனும் பதுங்குவான்; அது சுற்றுகையில் அவனும் சுற்றுவான்; ஒரு கணப்பொழுதேனும் அவன் தன் முதுகை வேங்கைக்குக் காட்டினவனல்லன்; புலி குறுக்கே திரும்புகையில் அதன் உடலில் ஈட்டியைப் பாய்ச்சுவான்; அது அவன் தலைக்குமேல் எழும்பிப் பாய்கையில் சின்னண்ணன் மண்டியிட்டு உட்கார்ந்து ஈட்டியால் அதன் அடிவயிற்றிற் குத்துவான்; அது பதுங்கியிருக்கையில் அவன் அதன் தலைக்குமேல் பாய்ந்து சென்று, அது தன் உடலைத் திருப்பிக் கொள்ளுமுன் வாற் புறத்தில் ஈட்டியைப் புதைப்பான். புலிக்கு உடல் முழுதும் புண்கள் உண்டாயின. அப் புண்களினின்றும் இரத்தம் பெருக்கெடுத்துப் போர்க்களத்தை நனைத்தது. சினப்புலியும் இளைத்ததன்று, சின்னண்ணனும் இளைத்தவனல்லன். பெரியண்ணசாமி வேடிக்கை பார்த்து நின்றார். கூட்டிலிருந்த பொற்கிளி வேங்கைக்குப் பல கூறுவதுபோல் கிய கியவென ஓயாமல் பேசிற்று. இதற்குள் பொழுதும் வீழ்ந்தது. பார்த்தான் சின்னண்ணன் இந்தப் புலியோடு இவ்வளவு நேரம் பொருவது தன் ஆண்மைக்குக் குறைவென் றெண்ணினான் எண்ணின மாத்திரத்தில் தன் கையிலிருந்த குத்தீட்டியை வீசியெறிந்து, 'வெறுங்கையோடு போர் புரிகின்றேன், வா' என்று அறைகூவித் தன் தொடைகளையும் தோள்களையும் தட்டி யார்ப்பரித்தான். ஈட்டி யில்லாமையை உணர்ந்த புலி அதுவே சமயமென்று சின்னண்ணன் மார்பின் மீது பாய்ந்தது. அது பாய்கையில் சின்னண்ணன் தரையின் மேல் குப்புற வீழ்ந்து, வேங்கையின் அடிக்குத் தப்பி, சரேலென எழுந்திருந்து அது திரும்புமுன் அதன் மேல்வாயையும் கீழ்வாயையும் தன் கைகளாற் பற்றிப் பிளந்தான். வேங்கை இடிபோற் குமுறி மாண்டது. அது விட்ட பேரோசை 'உனக்கபயம் உனக்கபயம்' எனத் தலையூரில் வீரதங்காள் காதில் வீழ்ந்தது.

பின்பு அண்ணன்மார் சிற்றூலைப் பட்டணத்துக்குச் சென்று, தாங்கள் கொண்டு வந்த பொற்கிளியையும் மயில், புறா, குயில், மான் முதலியவற்றையும் தங்கைக் களித்து, அவள்பால் விடைபெற்றுத் தங்கள் அரண்மனையை அடைந்து, குளித்து விருந்துண்டு, படுத்துக் களைப்பால் அயர்ந்து தூங்கினர்.

கிளிகள் ஆலமரத்தை விட்டுப் பறந்துபோய் வீரதங்காளின் மடியில் வீழ்ந்து, அரசிளங் கிளியை அண்ணன்மார் சிறைப்படுத்திச் சென்ற செய்தியைக் கூறி ஓலமிட்டன. வேங்கை உயிர் துறக்கையில் அபயமிட்டதையும் கிளிகள் அரற்றியதையும் கேட்டுச் சிந்தை கலங்கிய வீரதங்காள் நால்வர் காவலர் தன்னிடம் ஓடிவந்து பொற்கிளி சிறைப்பட்டதும் வேங்கை மடிந்ததும் கூறக் கேட்டுப் பொருக்கென் றெழுந்து சென்று, அவிழ்ந்து வீழ்ந்த கூந்தலோடு அண்ணன் காளிமன்னன் முன்னின்று கண்ணீருகுத்து நடந்த செய்திகளை யெல்லாஞ் சொல்லிப் புலம்பினாள்.

(தொடரும்)

இவ் வெளியீடு, யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையிலுள்ள கமலாசனி அச்சுநிலையத்தில், க. கி. நடராசனால் அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.